1991 ஆக்டோபர் 3] [திரு. கி. தர்மலிங்கம்]

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 31-3-1988 ஆம் தேதியுடன் முடிவுற்ற ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) எண். 4/1989, தொழில் துறை, தொழில் முதலீட்டு நிறுவனங்களின் கடன், வசூல் செயல்பாடு தொடர்பான பத்திகளின் மீதான குழுவின் 21-வது அறிக்கை, ஆகியவற்றை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்களின் குழுவின் தலைவர் அவர்கள் அறிக்கை வாசிப்பதற்கு முன்னால் நான் குறிப்பிட்ட சில வாசகங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் படுகின்றன.

4. அறிவிப்புகள்.

(அ) உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1991 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன் வடிவுகள் அறிமுகம் செய்தல். பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு, பேரவையில் அறிமுகம் செய்ய, ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

(அ) உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதானவரி (திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்த) சட்டமுன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.